தண்டமிழ் மாண்பு.

ஆக்கியோன்

கே. அப்துல் சுக்கூர்

திண்டுக்கல்
விஜயரெங்கம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது
1929

ஸ்ரீ கு. சுப்பிரமணிய ஐயர்,
B.A.

அவர்களின்

அன்பளிப்பு

தண்டமிழ் மாண்பு.

ஆக்கியோன்

கே. அப்துல் சுக்கூர்

திண்டுக்கல்
விஜயரெங்கம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது
1929

காப்பு.

நேரிசை வெண்பா.

எங்குஞ் சிறப்புற்றிலகி யோருமதுரைச்
சங்கஞ் சிறக்கத் தழைத்தோங்குந்—துங்க
மொளிர்தண் டமிழ்மாண் புரைக்க வோருவன்
மிளிர்தண் பதந்துணையா மே.

H. Abdul Shukur,

Secretary,

Samarasa Sanmarga Sangam,

KANIYOOR.

முன்னுரை

இப்புத்தகம் வெள்ளகோவில் "ஆரம்ப ஆசிரியர்" களின் முதலாவது ஆண்டுவிழா (27—9—28) வில், பழைய கோட்டைப்பட்டக்காரரும், ஈரோடு தாலுக்காபோர்டு பிரஸிடெண்டுமாகிய, ஸ்ரீமான் ராய்பகதூர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்கள் மாபெருந் தலைமையின்கீழ் என்னுற் பேசப்பட்ட "தண்டமிழ் மாண்பு" எனுங் கட்டுரையாகும்.

இக்காலியிற்றோன்றிய மக்கள் ஒவ்வொருவருக்கும் தேசாபிமானம், பாஷாபிமானம் முதலியவை வேண்டுமென்பது யாவருமறிந்ததே. அச்சரிய அபிமானத்தை மக்கள் பலதறைகளிற் செலுத்திக் கடனாற்றுவர். அங்ஙனம் அவ்வபிமானத்தைச் செலுத்தப் பலதறைகளிருப்பினும்,

"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே"

என்ற பெரியாரினிய மொழியேபோல், யான் பிறந்த செந்தமிழ் நாட்டின் சுந்தரமாண்பையும், எனது தாய்மொழியாகிய தமிழ் மொழியின் றணிவிலாமாண்பையும் எடுத்துரைத்தலாகிய விருதுறைகளிலும் அவ்வபிமானத்தைச் செலுத்துவதே, அருங்கடனாகக் கண்டு பல்வேறு சகங்களிலும், பலப்பல கிராமங்களிலும் போந்து பிரசங்கவாயிலாய் பிசாரஞ் செய்துவந்தேம், செய்தும் வருகின்றோம்.

ஆகவே அவ்வபிமானத்தைச் செலுத்தும் வகையில், "தமிழ் மாண்பை" மக்களுக்கு எடுத்துரைத்தலும் ஒன்றாகும்.

இச்சிறிய நூலில், எனது சிற்றறிவிற்குப் புலனுபவரை "தமிழின் தொன்மை", "தெய்வத்தன்மை", "மொழியின் இனிமை", "பொருள்சிறக்கும் பெருமை" காலத்திரிபின் அழியாமை ஆகியவைத்து ஏதுக்களையும் பிடமாகக்கொண்டு ஆராய்ந்தும், வடமொழியே தெய்வமொழி அது வே முதன்மை வாய்ந்தது என்று சொல்வோரின் கூற்றை தக்க காரணங்காட்டி மறுத்தும், பலப்பல பாடைகளில் தமிழ்ப் பாடையே யெவ்வாற்றானுஞ் சிறந்ததென்பதை யிடை யிடையே காட்டியும், இறுதியாக தற்காலத்தே தமிழ்மொழி பெற்றுள கிலைமையாதிய இன்றியமையாத இன்னோன்ன இனிய விடையங்களை என்னுலியன்றவரை எடுத்துக் கூறி யுள்ளேன்.

இத்தண்டமிழ் மாண்பு எனுங் கட்டுரையைப் பற்றி யான் மேற்குறித்த வெள்ளகோவிலிற் சொற்பொழிவாற் றுங் காலத்தே செவிகொடுத்துக் கழிபேருவகையடைந்த அன்பர்களும், அவைத்தலைமை தாங்கிய ஸ்ரீமான் ராய்பக தூர் நல்லதம்பிச் சர்க்கரை மன்ருடியாரவர்களும் இதை "தாங்கள் ஓர் புத்தக ரூபமாய் பிரசுரித்து வெளியிடின், ஆங்கிலமொழியாம் வேற்றரங்கின் வலியில் அகப்பட்டு அலைக்கு திரியும் நம் மக்களுக்கு மிகமிகப் பயன்படும்" என அடியேனுக்குப் பணியிட்டமை யானும் எனது உள்ளமும் அன்னர் கூறிய கருத்தையே வற்புறுத்தியதானும் இப்புத்த கத்திற்கு "தண்டமிழ் மாண்பு" எனும் பெயர்சூட்டி ஓர் சிறிய புத்தகமாய் வெளியிடலானேன்.

அறிவினும், வயதினும், தூலாராய்ச்சியினும், அநு பவத்தினும் மிகமிகக் குறைந்த வென்னுலிச் சிறுபுத்தகம் எழுதப்பட்டதாகலான் பலவழுக்கள் பலவிடங்களிற் பரந்து

கிடத்தல் கூடும். ஆகலின், அறிஞர் அவ்வழுக்களை யகற்றி யவ்வவ்விடத்திற்குத் தக்க பொருளை யெடுத்துக்காட்டின் அவைகளைச் சிரமேற்கொள்ளச் சித்தமாகவிருக்கிறேன்.

அருங்கலை கற்ற அறிவுடையோர், அடியேனியற்றிய இந்நூலையேற்று இன்னுந் தமிழைப்பற்றிப் பற்பல பெரு நூல்களியற்றி வெளியிடுமாறு ஊக்கவேண்டுகிறேன்.

இச்சிறு கட்டுரை புத்தக ரூபமாய் வெளிவந்தலவுதற் குக் காரணமாகிய பழயகோட்டை பட்டக்காரர் ஸ்ரீமான் ராய்பகதூர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரவர்களுக்கும் தண்டமிழ் மாண்பின் தகைமை யுணரா விக்காலத்துத் தக்கையைப் போன்ற தமிண்மாட்டும் தமிழ் விற்பன்னர் கள்மாட்டும், நீங்காத அன்பும் அருளும் உடையவரும் இச்சிறுநூல் வெளிவருமாறு ஊக்கியவரும் எனது ஆப்த நண்பருமான தளவாய்பட்டணம் உயர்திரு. A. திருமலை கோவிந்தசாமி ரெட்டியார் அவர்களுக்கும், அச்சேற்றுங் காலத்து உடனிருந்து உதவிபுரிந்த அன்பரும், திண்டுக்கல் விஜயரெங்கம் பிரஸ் மானேஜருமாகிய திரு. G. பாலகுருசாமி நாயுடு அவர்களுக்கும் எனது நன்றியறிதல் உரியதாகுக.

இங்ஙன்,

கா. அப்துல்ஷகூர்,

கூனியூர்.

மதிப்புரை.

மொழிகளின் சிறப்பை அவற்றுள் மாந்தர்களின் அறிவுச் சுடரைக்கொண்டு பொலியும் பெருங்காப்பியங்களாலளவிடல் அடைவுடைத்தாயின் நந்தமிழிற் பெரிதொன்று தேடினுங் கிடைக்காது. 'தமிழ்' எனும் மொழி 'இனிமை' என்று பொருள்படுவதுமாத்திரமன்றித் 'தனிமை' என்ற பொருளும் உடையதாகுமாற்றால் தனது ஒப்பற்ற உயர்வையும், பிறதிராவிட மொழிகட்குத் தாயாய் விளங்குகின்ற பெருமையையும், வேற்றுமொழிகட்குக் கடைப்பாடின்றி இயங்கும் திறமையையும் அறியலாகும். இதன் தொன்மைக்கு "ஆகியிற் றமிழ் நால் அகத்தியர்க் குணர்த்திய" என்ற சேனாவரையர் கூற்றே சான்று. தமிழ் மொழிக்கு பன்னீராயிரம் சூத்திரத்தாலோர் இலக்கணம் அகத்தியர் அன்று அமைத்தார் எனின் அம்மொழிக்கதுகால் எத்துணை பரந்த இலக்கியமிருந்திருக்கவேண்டும். பண்முறை கடற்கோளால் தமிழகம் குறுகிய காலத்து இவைகள் பண்டை மக்களோடு தஞ்சினும்கூட, இதுகால் ஓர் 'அணுவைத்தானீத்து எழ் கடலீப் புகட்டிக் குறுகந் தரித்த குறளும்,

"வானயாறு மடுத்தப்ரா வாகமே?
கானயாகிறனும் கங்கை திரண்டதோ?
தேனிலுல் நனிசிந்துறும் சிந்தென்ப
தேன் இராதமுத்தும் இதன்சுவை"

என்று தெளியும் கம்பர் கவியும் "சங்கமருவிய காப்பியம் பலவும் உடைத்தாயிருக்கின்ற மொழி நந்தமிழ் மொழியே.

இம்மொழியின் மாண்பை எடுத்துக்கூறும் இன்பனி பூண்ட நம் பண்டிதர் K. அப்துல் சுக்கூர் சாயபு அவர்கள் தன் முயற்சி தமிழின் இனிமையைச் சுவையாத பலர்க்கும் அறிவுறுத்த காரணமாகும் என்பதற்கோர் ஐயம் இன்று. இவ்வெரும் முயற்சிக்கு தமிழன்னை ஆசிபுரிந்து தன் தொண்டிலேயே தனித்து நின்று தூயபற்றுதலிலும், ஆராய்ச்சியிலும், ஆராய்ச்சியின் பயனை இஃதினைய வெளியீட்டால் உலகுக் குணர்த்தலிலுமே நம் நண்பரை ஊக்க எல்லாம் வல்ல அவளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

K. R. முத்துசாமி அய்யங்காரவர்கள்,

சூப்பர்வைசர் ஆப் ஸ்கூல்ஸ்,

காங்கயம்.

தண்டமிழ் மாண்பு.

சகோதரிகளே! சகோதரர்களே!

இமிழ்திரை யுலகில் வழங்கும் பல்வேறு வகைத்தாயுள்ள மொழிகளில், நந்தெய்வச் செந்தமிழ் மொழியுமொன்று. ஒருமொழியின் பெருமையை யதன் தொன்மை, தெய்வத்தன்மை, மொழியின் இனிமை, பொருள் நிறக்கும் பெருமை, காலத்திரிபின் அழியாமை ஆகிய வேதுக்களால் அறியலாம்.

ஆதலா னந்தமிழ்மொழிக்கு மிவ்வைந்து எதுக்களையும் பீடிகையாக்கொண்டு முறையே யாராய்வேம்.

தொலங்குந் தமிழின் தொன்மை மாண்பு.

இஞ்ஞான்று வையத்தே பிடுபெற வழங்கும் மொழிகளினந்திருத் தமிழே, பழையம்! பழையம்!! எனப் பறையறைவது. என்னை? நந்தமிழ்மொழி மூதலிற்றிரிபுரமெரித்த விரிசடைக் கடவுளானும், குன்றமெரித்த குமரனானும், குண்டிகைக் குறுமுனியானும் புரக்கப்பட்ட தொன்மையுடையது. பிற்றை, சேர சோழபாண்டியர்களாற் காக்கப்பட்டு விளங்கி வந்ததென்பதை யாவருமறிவர். சேர சோழ பாண்டியர்களோ படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வந்தவர்கள் என்பது செந்நாப்புலவரின் திருக்குறளால் தெரிகின்றது. என்னை?

> "வழங்குவதுள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பிற் றலைப்பிரிதலின்று"

என்ற வள்ளுவர் குறட்குத் தெள்ளிய வுரைகண்ட வாசிரியர் பரிமேலழகர் (தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டுவருதல்) என வரைந்துளார். ஆகலின் இம்மூவரசர்களுந் தொன்மையுடையராகலின், இவர்களாற் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்பட்ட நற்றமிழ் மொழியுந் தொன்மையுடையதென்பது புலனுகும். வள்ளுவர்க்குப் பின்னேவந்த உள்ளகிளர்ச்சியைத் தெள்ளிதினுணர்த்துங் கல்வியிற் பெரிய கம்பரும்,

"நின்றவனே வந்தெடி யோனடி பணிந்தா
னன்றவனு மண்பொடு தழீஇயமுத கண்ணு
னன்றவர வென்றபல நல்லுரை பகர்ந்தா
னென்றுமுள தென்றமிழ் இயம்பி யிசைகொண்டான்"

என்ற செய்யுளின் ஈற்றடியில், 'தமிழ் என்று முளது' என நற்றமிழின் றொன்மை மாண்பைத் தலைக்கிப் போந்தார்.

இஞ்ஞான்று ஆங்கிலமும், அருந்தமிழ்மூணர்ந்தபுல மையுடையோராற் பழமாண்புடையோரெனப் போற்றப் படும், எகிப்தியர், பாபிலோனியர், யவனர் முதலியோர் காலத்தொன்மையிற் றமிழை வென்றவர்களல்லரென்ப.

தற்போழ்து நீர்ப்பரப்பாயிருக்குந் தென்னிழி (Indian Ocean) நிலப்பரப்பாய் லெமூரியா எனப் பெயர்பெற்றிருந்த ஞான்று வழங்கிவந்த மொழி நற்றமிழேயாகும். என்னை? புறநானூற்றில்

"தெனஅ தருகெழு குமரியின் றெற்கும்" எனக் காரிகிழார் பாடியருளியபடி, கன்னியாற்றிற்குத் தெற்கேயுந் தமிழ் வழங்கிவந்ததென்பது புலனுகும். கன்னியாற்றிற்குத்

தெற்கேதான் தென்னிழி யிருக்கின்றது. இந்நிலப்பரப்பே யுலகின் முதற்கட்டோன்றிய நிலப்பரப்பென்பதூஉம், ஆங்குத்தான் மக்கண் முதன்முதற் றோன்றினதென்பதூஉம், ஆண்டு மக்களின் உள்ள வளர்ச்சிக்கேற்ப வழங்கிவந்த மொழி நந்தமிழென்பதூஉம் பழங்கலியுணர்ந்த பண்புடையார் கண்டவாய்மையாகும். இவ்வேதுக்களானும் நஞ்செந்தமிழ் மொழியே, மக்களினவையுளத்திற் கியைய வியக்கியொலிக்குறியா யெழுந்த முதன்மொழியென்பது பெறப்படுகின்றது.

இனி வடமொழியைத் திடமாய்க் கற்றுணர்ந்த சிலர் தாம் கற்றுணர்ந்ததற்கேற்பத் தம் வடமொழியே யெம்மொழிக்கும் முதன் மொழியென்றும், தேவமொழி யென்றும் பலபடப் பகர்வர். அன்னர் கூற்றின்படி வடமொழி முதன்மொழியாக விருக்குமேன், மக்களின் உள்ள வளர்ச்சிக்கேற்ப வளர்ந்து வழக்காறுடைய தாயுமிருத்தல் வேண்டும். அம்மொழி யங்ஙனமின்றி வழக்காறற்றதேயவரின் கூற்றுக்கு விடையிறுக்கும் ஆதி அந்தம் அற்றவன் ஐயன் எனின் அவன் மொழி இறந்துபடக் காரணம் யாதோ?

இன்னும் சிலர் வடமொழி நந்தமிழ் தனக்கு முதற் கட்டோன்றியதென்பர். அன்னர் தம் கூற்றுக்கு அகச்சான்றுகத் திருவிளையாடற் புராணத்திலுள்ளவோர் செய்யுளை யெடுத்துக்காட்டி "சிவபெருமான் பாணினி முனிவற்கு முதற்கண்பாணினீயம் என்ற இலக்கணத்தை யருளிப்பின்பு சிலகாலங்கழித்து அகத்தியத்தை யகத்தியமுனிவற் கறிவுறுத்தினன்" என விச்செய்யுளிற் பரஞ்சோதி முனிவர் பகருன்றனரென்பர். இச்செய்யுட் குரையுறைக்க வந்த ஆசிரியர் உயர்திரு. பண்டித க. மு. வேங்கடசாமி நாட்டார்

(பிஷப் ஹீபர்ஸ் கல்லூரித் தலைமைத் தமிழாசிரிய) ரவர்க ளெழுதி முரையை யன்னர் உற்று நோக்குவரேல் வட மொழியே முதன்மொழி யென்னுந் தங்கூற்றை விடுத்து தமிழே முதன்மொழியெனச் சாற்றுவர். அச்செய்யுளும் ஆசிரியர் உரையும் கீழே தருகின்றேம். அறிஞரன்றி யாய்க.

> "வீடையுகைத்தவன் பாணினிக் கிலக்கணமேனுன் வடமொழிக் குரைத்தாங் கியன்மலிய மாமுனிக்குத் திடமுறுத்திய தென் சொல்"

இச்செய்யுட் காசிரியருரைத்த ஆய்வுரை.

பாணினி யென்பவர் காந்தார நாட்டிலே சலாதுர தத்திலே பாணினி யென்பானுக்குத் தாட்கியென்பாள் வயிற்றுப்பிறந்து இளமையிலே மந்தமதியுடையானென ஆசிரியனாலும் பிறராலு மவமதிக்கப்பட்டுப் பின் சிவனை நோக்கித் தவம்புரிந்து மாகேசுவர சூத்திரவுபதேசம்பெற்று பலகலையினும் வல்லராகி வடமொழிக்குச்சிறந்ததோரிலக் கணமியற்றினரென்ப. இவரியற்றிய வியாகரணம் பாணினீ யமெனப்படும். இதனைக் காஸ்மீர நாட்டின் அரசனாகிய காளிட்கனது அவைக்களத்தே யரங்கேற்றின ரென்பர். இந்நூலுக்கு உரைகண்டவர்கள், வரருசியும், பதஞ்சலியு மாவர். பாணினியின் காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதெனச் சிலரும், நான்காயிர மாண்டுகட்கு முற் பட்டதெனப் பலரும் கூறுநிற்பர். எங்ஙனமாயினும் பாரத இராமாயண காலங்களுக்கெல்லாம் முன்னரே தென்மதுரை யகத்துத் தலைச்சங்கப் புலவராய்த் திகழ்ந்த வாசிரிய ரகத் தியனுர்க்குப் பாணினி மிகவும் பிற்பட்டவரென்பது தேற்றம். எனவே சிவபெருமான் பாணினிக்கு முதற்கண்

இலக்கணம் அறிவுறுத்தி பின்பு அகத்தியனுக்கு அறிவுறுத்தினென்பது சிறிதும் பொருத்தாது. ஆகலின் "மேனுள்" என்பதற்கு முன்னொரு காலத்தில் எனப் பொதுவகையாகப் பொருள் கொள்ளப்பட்டது.

இப்புராணமியற்றிய வாசிரியரும், இவரினைய பிறரும் பாணினீயத்தையே மூற்பட்டதாகக் கொண்டனரெனினும் இன்னோர் சரித்திர வாராய்சியைப் பொருளாகக் கொண்டவர்ல்லராகலான் இவர்கள் கூற்று இவ்வுழித்தவறென வெடுத்துக்காட்டுதலில் இவர் பெருமைக்கு இழுக்கொன்று மின்றென்க".

காலத்தொன்மையின் மாத்திரமில்லாமலும், வடமொழியைவிடத் தமிழே பல்லாற்றானும் உயர்ந்ததென்பதற்குப் பற்பல சான்றுகளுள. இக்கட்டுரை மிக மிக விஞ்சுதலான் மிகைப்படக்கூறலென்ற வழுவிற்கஞ்சி எடுத்துக்காட்டாக ஒரு விடயத்தை மட்டும் கீழேதந்து மேற்சொல்வேம். அஃது வருமாறு:—

பழனித்திருவாயிரமாதிய பற்பல பிரபந்தங்கள் யாத்தண்டபாணி சுவாமிகண்மாட்டு, வேளாரிலுள்ள சிலர் வடமொழியே உயர்ந்ததென வாதிக்க, இவர் தமிழேயுர்ந்ததெனச்சாற்ற வாதம் முடிவில் திருவுளச்சீட்டாற் சங்கையைத்தீர்ப்பதெனச் சீட்டெழுதி, செவ்வாய்ப்பேதைத்திருநாதற் சிறுமியொருத்தியாலெடுக்க, தமிழே உயர்வு என்று வரையப்பெற்ற சீட்டுவரக்கண்டு, தமிழே யுயர்வு என்று அச்சபைக்கண் முடிவுபெற்ற விடயத்தைப்பற்றி, தமது தமிழலங்காரமென்ற நூலின் முதற்செய்யுளில் "செந்தமிழே யுயர்வென்று முன்னொரு சீட்டெனக்குத்தந்தனன் கந்தன்" என்றும், தமது அற்புதத்திருப்புகழின் ஈற்றடியின்கண்

தனிவரச முற்றதென்ற லாற்றப் படைத்த
பொதியச லத்திலன்று தோற்றிப் பழுத்த
தமிழே புயற்சியென்று சீட்டுக்கொடுத்த
பெருமாளே.

எனக்காட்டுவர்.

இனி நந்தமிழின் றொன்மையைப்பற்றிச் சருங்கக் கூறின், அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் நிற்கும் பரம்பொருள் எஞ்ஞான்றும் வேறுபாடிலாது என்று மொருதன்மைத்தாய் நிலவுதல்போல், நந்தமிழும் என்றும் வேறுபாடிலாத் தொன்மை வாய்ந்ததென்பது கீழ்காணும் மனோன்மணீயச் செய்யுளால் தெளியக் கிடக்கின்றது,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையரு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதேபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரினமைத் திரம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"
(மனோன்மணீயம்.)

திருத்தமிழின் தெய்வச்சிறப்பு.

கண்ணுதற் கடவுள், தமக்கிருப்பிடமாகிய பொன்மன்றம் வெள்ளிமன்றமிருக்க அவற்றை விடுத்து திருவெல்வேலியிலுள்ள தாமிர சபைக்குத் திருக்குற்றலச் சித்திர சபைக்கும் வந்து வந்து திருநடனஞ்செய்தல் ஏற்றுக்கு? ஆடலின் இன்பப்பையாற்றச் சென்தமிழ் முனிவன் திருத்தவம்புரியுஞ் சந்தனப்பொதிகையிற்றவழ்ந்து வருஉந்தனித் தென்றலிற்றிளைக்கவும், தமிழாம் அமிழ்தைச் செவிமடுக்கவும் அன்றே? வேறு எம்மொழிக்கும் இத்தனிச்சிறப்பு இன்றன்றே. பரஞ்சோதி முனிவரும் இக்கருத்தை

"கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
யடுக்க வந்துவந் தாடுவா னுடலி னிலைப்பு
விடுக்க வாரமென் காற்றிரு மூகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ்த் திருச்செவி மாந்தவு மன்றே"

என்ற இச்செய்யுளின் வாயிலாய்ச் செப்புவராயினர்.

நிரைக்கடலைத் திருக்கரத்தாலடக்கிச் சிறியவுண்டை செய்து உண்டுமிழ்ந்தவனும், பெரிய விந்திய மலையைப் பிலம்புகுத்தியவனும், கங்கையைக் கரகத்திலடைத்துக்காவிரியாய்ப் பெருகச்செய்தவனுமாய குண்டிகைக் குறுமுனியும், தீந்தமிழ்கற்பான் செவ்வேற்காத்துத் திருமுருகனைக் குருவாகக் கொண்டனனென ஆன்றோர் கூறுப. இதனாலுந் தமிழின் றெய்வச்சிறப்பின்றிறன் கண்கறியலாம்.

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள், தென்மதுரையகத்தே கரியைப்பரியாக்கியதூஉம், பரியைகரியாக்கியதூஉம், பிட்டுக்குமண்சுமந்ததூஉம், எற்றாலெனின், திருவாசகத்தீந்தமிழைச் செவிமடுத்தற்கன்றே?

நான்மாடக் கூடலுறை நம்பெருமான் வடமொழியிலக்கணங்களைத் திருவாய்மலர்ந்து அந்நூல்கட்குத் தம்பெயர் சூட்டாது பாணினி, இந்திரன், இவர்களின் பெயரை நாட்டி "பாணினீயம்" "ஐந்திரம்" என்று அழைத்து, தமிழில் அகப்பொருள் இலக்கணத்தை யருளிநக்தேனினுமினியதீந்தமிழின் நயமும், இனிமையும் ஓர்ந்துணர்ந்ததம் பெயருடன் வழங்கிடத் தனிவிழைந்து "இறையனாரகப்பொருள்" என்று தன்னமஞ்சூட்டித் தாணியிற்றரிக்கச் செய்த மொழியன்றே? நற்றமிழ்மொழி, இத்தனித் தெய்வமாண்புவேறு எம்மொழிக்கும் இன்றென்றே யிறையுந்தாழாதியம்புவேம். இஃதைச் சீகாளத்திப் புராணத்தாரும்.

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் மூடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ்செய்யப் பெற்றே"

யென்றியம்புவர்

வடமொழி வேதங்களுக்கும், குடருங்கொழுவுக்குரு திபுமென்புந் தொடருரகம்பொடு தோலுமுடைய தோகையரின் மையலைத்தொலைத்துத் துறந்தவர்க்கே தூயவீடுகிடைக்கும் என்று மூழ்கிய பொருளை மூற்றிலு மாற்றி, அங்ஙனம் மையலைத்துறவாதவர்க்கும் அழியாவீடுண்டெனக்காட்டுதற்கு பாவையிற் படிந்தும், சங்கிலியிற்றொடக்குண்டும் கிடந்த சுந்தரமூர்த்தியின் மந்தாதந்திமிழைச்செவிமடுக்க வேண்டியன்றே? பெண்ணிடங்கொண்ட புண்ணியன், பாவையினூடல் தீர்ப்பான், கழுதுகண்படுக்குங்காரிருளில் ஒரு காலல்ல இருகாலும் நடந்து தூதுசென்றனன் வேறு எம் மொழியைகேட்க இரவினிற்றாதேகினன்? ஆரியமொழிக்கா? அல்லது ஆங்கிலமொழிக்கா? அன்றன்று. நந்தமிழாம் நயமொழிக்கே. அம்மம்ம! நந்திருத்தமிழின் தெய்யமாண்பையென்னென்றியப்புவேம். மேற்காணுங்கருத்தையே பரஞ்சோதி முனிவரும்

"அரவக லல்குலார்பா லாசைதீர்த் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ்சாற்றிய தலைவன்றன்னை
பாவைதன் னூடல்தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானள்
இரவினிற் றூதுசென்றோன் யென இயம்புவராயினர்"

இனி அழித்தற்கடவுள் இங்ஙனம்விழைவுடைய ஆளித்தற்கடவுளும், ஆழ்வாராதிகளாருளிய தேனினு மினிய திருவாய்மொழிமுதலிய செந்தமிழ்ப்பாக்களைச் செவிமடுக்கத் தீரா ஆவல்கொண்டனன்.

என்னை? திருக்கச்சியிற் றிருவெஃகாவெனுந் தலத்திற் சொன்னவணஞ்செயும் பெருமாள் சக்கிரியிற் றிருப்பாமாலை சாற்றித் திருத்தொண்டுபுரியுந் திருமழிசையாழ்வாரெனும புலவர் பெருமான், தமக்கு எவல் புரிவாளோர் விருத்தை யைப்பாடி மடவரலாக்க, இதனைப் பல்லவராஜன் கேள்வி யுற்றுத்தன்னையும் அங்ஙனமே பாடியருளவேண்டுமென்ற லும், புலவர் மறுத்ததுகண்டு, அரையனும் ஆழ்வாரை யழைத்து நீவிர் எம்மூரைவிட்டு வேற்றார்புக்கு வாழ்மின் எனப்பணிப்ப, ஆழ்வாருந்தன்கையேட்டினர் கணிகண்ண னாரும். ஊரைத்துறந்து வேற்றார் செல்லப் பாம்பணைப்பள் ளியானும், நீந்தமிழ்பயின்ற செந்நாப்புலவரைத் துறக்கத் துணியாளுய், தன்பாயலீச்சருட்டியோர் தோள்மேல்வைத் து, மலர்மகளோர் அலர் கான்பிடித்துடன் அளந்துவர, அச்செந்நாப் புலவனைத் தொடர்ந்துசென்றனன். இதை யறிந்த இறைவன் இயற்புலவரை மன்றடித்தன்குறையிரக் கப்புலவரும் தன்புரி நண்ணினர் பாமபணையானும் பாய் விரித்தமர்ந்தனன் என இத்திருமழிசையாழ்வாரே நிற்க்கா னும் இரு வெண்பாக்களி வெழிலாயிபம்பவர்.

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணர் நீயிருக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனியான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்"

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணர் நீயிருக்கவேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலனியான் போக்கொழிந்தே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக்கொள்"

இக்கருத்தையே குமரகுருபரவடிகளும் மீனாக்கி யம்மைபிள்ளைத்தமிழில் "மணிகொண்ட" வென்னுங்கரப்பு பருவத்துச்செய்யுளில்

"பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே"

எனப்பகர்வாராயினர். இவருக்குப்பின்தோன்றிய பொன்னுங்காலமுத கவிராயரும் "சீரிலகுமான்மணிப்பாய் சுமந்தான்" என இக்கருத்தைச் செப்புவாராயினர்.

இனியுயர்நிணப் பொருள்களேயன்றி அஃநிணப்பொருள்களும், நம், சீரிய-பேரிய தீந்தமிழுக்குக்கட்டுப்பட்டது என்னின் மற்று நாம் ஈண்டு செந்தமிழின் பெருமையைப் புகல்வது மிகையாம்; எனினே? மட்டிலாப் புகழ்கொண்ட வெட்டையாபுரம் மன்னனின் சமஸ்தான வித்துவானுகிய எம்மகம்மதியக்குலத்து, உமறுப்புலவரென்பார், அம்மன்னன் அவைக்களத்தே, வாலிவாருதியாம் ஒரு மாபெரும்புலவனை வெல்லுமங்காலத்து, அவ்வாலிவாருதியினது 'கைக்கடகம்' எம் உமறுப்புலவரை விளித்து "வாலிவாருதியென்றறியீரோ? பிள்ளாய்!" என்ன, உடனே எம்முமறுப்புலவர் தன் மருங்கிலிருந்த கூரெழுத்தாணியை யெடுத்து அதை விளித்து "அக்கடகத்திற்குச்சரியான விடையிறும்" எனச்செப்பித்தரையில் ஓங்கியுன்ற உடனே யவ்வஃநிணயாகியஎழுத்தாணி நஞ்செந்தமிழின் தெய்வப்பெருமை தெரிப்பான், ஆண்டுக்குழுமியிருந்த அவையோரும், அப்புலவனும் வாலிவாருதியும், கனிவியன்று நடுங்குமட்டியாக மாபெருங்குரலில்

சமரதர கததுவ்க மனருஞ்ச பாசென்று
சரிசமா சனமீதிலே
யமரவொரு கரகொம்பு தினமுஞ்சு மாசொல்லு
மமுதகலி ராஜனே
நிமிரபகை வரைவென்ற பருதியெனு மெமதெட்ட
தீரனணி வாயில் வித்வான்
உமறுகும நிடிலண்ட முகடும்படனென்று
முன்னெச்சம்வையும் பிளாய்"

எனச்செப்புமேல் மற்று நாமியம்புவதெதன்?

அம்ம! செந்தாமரையாளைத் திருமார்பில் வைத்த நந்தாவெழிலுடையோனும், வடமொழிவேதங்கள் அல்லும் பகலுமலர்தலைந்து கேடியுங்காணுதன்குரைகழல் குழிந்து புண்படத் தமிழைத் தான்தேடியடைவனேல், மற்று இச் செந்தமிழின் தெய்வப்பெருமை கின்னுட்பல்பிணிச் சிற்றறிவுடைய நம்மாற்சொல்லுந்தரத்ததோ? சொல்வீர்! முத்தமிழ்த்துறையின் மூழ்கியபுலவீர்! வேற்றுமொழிக்கில்லாத் தனிப்பெருந்தெய்வப் பெருமைகந்தமிழுக்கே சிறப்பாக வரித்தென்பதையறிவீர். செந்தமிழின் தெய்வப் பெருமையை விரிக்கிற்பெருகும். ஆதலில் இவ்வளவில் நிறுத்தி மேற்செல்வோம்.

தமிழ்மொழியினினிமையும், பொருள் சிறக்கும் பெருமையும்

குன்றமெறிந்த குமரக்கடவுளும், குண்டிகைக்குறு முனியுங்கூடியாய்ந்த இப்பைந்தமிழ், கேட்டோர் செவியையும், சொல்வோர் நாவையும், இனிக்கச்செப்புமென்பது "தமிழ்" எனும் பதத்தின் பொருளே நன்கு விளக்கும். "தமிழ்" எனுஞ் சொற்கு இனிமையென்றே பொருள் என்னே?

"இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்"
(பிங்கலந்தை)

"தேனுறை தமிழுந்திருவுறை கூடலும்"
(கல்லாடம்)

"தமிழுறை நறவமுந்தனித் தண்டேறலும்"
(கம்பர்)

என்ற மேற்காணும் அடிகளில் "பிங்கலந்தையார்" "தமிழ்" என்பதற்கு இனிமையென்றும், மற்றுளகல்லாடரும், கம்பரும் அடைகொடாது தமிழ் என்று வாளாகூர மனம் வராது முறையே "தேனுறை தமிழ்" தமிழுறை நறவம்=

இனிமையுடையதென், என்றே கூறிப்போந்தனர். பாக்களை பாடின பழம்புலவோரிங்ஙனமாக, பண்டையுரையாளரிற் சிறந்த உச்சிமேற் புலவர்கொள்ளுச்சினார்க்கினியரும் "தமிழ்த் தழீஇய சாயலவர்தங்கு மலர்த்தூர்" எனுஞ் செய்யுளடிக்கு "இனிமை தழுவிய சாயலையுடையவர்" எனப்பொருள் கூறியிருத்தலுந் தமிழ் எனுஞ்சொற்கு இனிமை யென்பதைப்புலப்படுத்தும்.

மூற்றத்துறந்த முனிவோரும் முற்றிய பகையை முறித்தல் முடியா ஆயினும், தமிழ்பாவாகிய தண்டேறலைத்தஞ் செவிகுளிரத்தாமருந்துவரேல், காய்கினக்கடும்பசி நீங்குவர் என்பதிலையமில்லை. அன்னார்க்கு அப்பாக்களைக் கேட்கும் வரை, ஓர் உணவும் வேண்டுவதிலை. இவ்வுண்மையைத் தமிழ்த்தேனருந்தித் தனியின்பந்துய்த்த நம் பொய்யில் புலவர்,

"செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீய்ப்படும்"

எனச்செப்புவாராயினர். இக்குறட்பா "கேள்வி" என்னும் அதிகாரத்துட் கூறப்பட்டிருப்பினும், ஈண்டுத்தமிழ்ப் பாக்களைக் கேட்குங் கேள்வி என்று வைத்துக்கொண்டால் வரும் இழுக்கென்னே? ஒன்றுமின்றெனக. ஆகலின் யாம் எடுத்துக்கொண்ட பொருட்கேற்ப, "தமிழ்க்கேள்வி" என்றேபொருள்கொண்டேம். நந்தமிழின் இனிமையிங்ஙனமாகப் பொருள் சிறக்கும் பெருமையைப்பற்றிச்சிறிது கூறி மேற்செல்வேம்.

தமிழன்பர்காள்! நந்நிருத்தமிழே போல வேற்றுமொழிகள் ஒரெழுத்தொரு மொழியாய் நின்று, பொருள் சுரந்து மொழியாலாம் பயன் முழுமையும் அளிக்கா வென்பதுதேற்றம். நந்தமிழிலோ வோரெழுத்தொரு மொழிகள் அளவி

றந்து கிடக்கின்றன. வேற்றுமொழிகள் காண்கு, ஐந்து, எழுத்துக்கள் சேர்ந்தேபெரிதும்ஒரு மொழியாகிப்பொருள் சிறத்தலால், மக்கள் அப்பாடையிற் பேசவேண்டுமேல், சிலபொருள்களைத் தெரிவிக்கப்பல நீண்ட மொழிகளையிட்டுப்பேசி அதிகமான மூச்சை வெளிப்படுத்தித் தம் ஆயுளைச் சிதைத்துக்கொள்கின்றனர், நந்தமிழிற் பேசவேண்டுமேல் பெரிய பொருளைத் தெரிக்கச்சிறிய மொழிகளையிட்டுப் பேசலாம். அதனல் சுவாசம் அதிகமாய் வெளியே போவ தில்லை. ஆயுள் சிதைவதில்லை

(உ—ம்) ஓரேழுத்தோரு மொழிகள்.

ஆ—பசு
ஊ—மாம்சம்
ஏ—அம்பு
ஐ—அழகு
ஓ—மதகுநீர்ப்பலகை

எனச்செம்பொருள் சிறக்குந் தகைமைத்து நந்தமிழ் மொழியே.

இஞ்ஞான்று தமிழுக்கென்றே தன் உடல், பொருள், ஆவி ஆதியவற்றையளித்தவரும்-அளிக்கின்றவரும்,தமிழின் வரிவடிவம், ஒலிவடிவம் இவற்றின் அநுநண்மைகளை நுணுகிக்கண்டறிந்தவருமான, பா—வே—மாணிக்கநாயக்கவர் கள், ''நவசக்தி'' சிலம்பு-8—பால், 42 இல், தமிழைப்பற்றி யுரைக்கும் கீழ்க்காணும் பொன்னுரையை யறிஞர் உன்னி யாய்க.

பா-வே-மா- கீற்றமேகுடிகொண்ட போர்வீரனுக்கும், அன்பே வடிவான தாயக்கும் தமிழில் தக்கபடி பேசவார்த்தைகளிருக் கின்றன. ஒலிகள் இருக்கின்றன. தமிழில் எழுத்துக்கள் வகுக்கப்பட்டிருப்பதோடன்றி, சொற்களையும் அந்தந்தப்பண் புக்குரிய பொருளைத்தருமாறு செய்திருக்கிறார்கள்.

தமிழில்அடிக்கடிவழங்கும் சொற்களெல்லாம் ஓரெழுத்து, இரண்டெழுத்து, மூன்றெழுத்து, உடையனவாகவே யிருக்கின்றன. நான்கு எழுத்துக்கு மேற்பட்ட சொல்லே யதிகமாகத்தமிழில் இல்லையெனலாம். வா, போ, என்ற வோரெழுத்துச்சொற்களின் அருமையைப்பற்றிக்கூறவும் வேண்டுமோ? "பேச்சை விட்டாயோ? மூச்சைவிட்டாயோ?" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். எழுத்து அதிகமாகவுடைய சொற்களாலாகிய மொழியைப் பேசுவதாலாயுட் குறைவு ஏற்படும்.

ஆங்கிலத்திற் பேசவேண்டுமானால், எழுதவேண்டுமானால், எண்ணத்தோன்றுகிறபடி வார்த்தைகளை வைக்கமுடியாது. இரு தியில் வந்த எண்ணம் முதலிலும், முதலில் வந்தவெண்ணம் கடைசியிலும் வைக்கப்படவேண்டும். ஆனால் தமிழில் அவ்வாறில்லை. தோன்றுகிறபடி சொற்களை யமைக்கலாம். இதனால் தவறு ஏற்படுவதற்கேதுவில்லை. எண்ணத்தை யெண்ணிவிட்டுப்பின்னர் பாஷைக்குத்தக்கபடி வார்த்தைகளை வைப்பதென்பது கஷ்டமான காரியம். மக்கள் அனைவருக்கும் எண்ணப்போக்குக்குத்தக்கபடி பேசத்தகுந்த மொழி நந்தமிழ் மொழியேயாகும்.

அறிஞர்கள்! மேற்கானும் பொன்னுரையை யூன்றி யூன்றியாய்வீர்களேல், மொழியின் இனிமையும், பொருள் சிறக்கும் பெருமையும் நன்கறிவீர்கள். சுருக்கக்கூறின், நம்மொழியின் பெருமையும், இனிமையையும், நம்நாட்டாரே யன்றி யாங்கிலகாட்டுப் போறிஞர்களாகிய, போப், கால்டுவெல், தாம்சன், முதலியோருமுணர்ந்து, தம் தாய்மொழியாகிய ஆங்கிலத்தில் திருக்குறள் முதலிய நூல்களை மொழிபெயர்த்தது தமிழ்ப்பணியின் பெருமையைத் தலைக்கொள்வாரானர். இன்னும் இதன் பெருமையை விரிவாகக் காணவேண்டுமேல், உயர்திரு—மறைமலையடிகள், பா. வே—மாணிக்கநாய்க்கரவர்கள் முதலிய தமிழ்த்தொண்டர்களின் நூல்களைக் கண்ணுற்றறிய வேண்டுகிறேன்.

தண்டமிழ் காலத்திரிபில் அழியாமை

தெள்ளிய பைந்தமிழ்ச் செல்வர்காள்!

இஞ்ஞான்று மேனாட்டிருந்து நம்நாட்டினகண் வெம் மையலீவிசி வரூஉம் அகன்ற வெள்ளப்பெருக்கில், பற்று ளமொழிகள் அமிழ்ந்தொழிந்தழிய நஞ்சீரிய செந்தமிழ் இதுகாறும்அமிழவில்லையென்றேயியம்புவேம். தற்போழ்து ஆங்கிலரின் அரசாட்சியாதலால் அன்னார் தம்மொழி யைப்பெருக்க விழைந்து, பணத்தாலும், பதவியாலும், நம் மக்களை அவர்தம் மொழியைப்பயிலச்செய்து நாட்டுநாள் தம்மொழியை மேலோங்கச் செய்தனர்: செய்கின்றனர். அற்றால், நந்தமிழர்கள் ஆங்கிலமொழியெனு மணங்கின் வலியிற்சிக்குண விருக்குங்கால், தமிழின் தனிப்பெருந் தொண்டர்களாகிய, திருவாளர்கள்–மறை மலையடிகள், ,,நவ சக்தி'' ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள மணி—கதிரேசச் செட்டியாரவர்கள்—பா—வே—மாணிக்க நாய்க்கரவர்கள் ஆதிய அன்பர்கள் தோன்றித்தமிழ் நாட்டி னரைக்கண் விழிக்கச்செய்தனர்கள். (அன்னார்க்கு என் மனமார்ந்த நன்றியுரித்தாருக.

தமிழனங்கைப்புரந்தவள்ளல்களும், தமிழ்ப்பரியற் றும் புலவோர்களும், அழிந்தொழிந்து காலநதிநீர்து நிற் கும் இஞ்ஞான்றும், பிறமொழிக்கலப்பாகிய பெருவெள்ளம் கரைபுரண்டோடு மிதுபோழ்தும், நந்திருத்தமிழ் அழியாதி ருத்தலேக்காண எம்முள்ளத்தில் ஓகைபெருகி வழிகிறது. தண்டமிழின் தன்மை யறியாச்சில்லோர் ''தமிழை யாவரி க்காலத்துப் பேசுகிறார்'' ஆங்கிலமொழியாலன்றே பெரும் பாலும் வார்த்தையாடுகின்றனர், தண்டமிழின் தனிவளன் தகர்ந்துவிட்டதே, என்று பலபடப் பகருவர். அன்னார் கூற்றின்படி தமிழ் மொழியின் வளங்குறைந்தது. தமிழின்

குற்றமன்று. மொழிவளங்குறைதல் மொழியை யாளுவோரின் குற்றமே. என்னே? தமிழ் மக்கள் ஆங்கிலமொழியெனும் அணங்கின் மையலில் அகப்பட்டு அருந்தமிழ் அறைவதையும், அழகொடு வரைவதையும் அறவே மறந்தனர். அங்ஙனம் ஏதோவோர் கால் தமிழிற்பேசினாலும் எழுதினாலும் தனித்தமிழோடுரைப்பதும் வரைவதுமின்று. பேசும போது 10 தமிழ்வார்த்தைகள் மொழிந்தால் 20 ஆங்கில வார்த்தைகளைக் கலந்து அன்னர் உளறிக்கொட்டி விடுகின்றனர். இன்னர், தமிழ் பேசுங்கால் இடையிடையே புகுத்தும் ஆங்கில வார்த்தைகளுக்கு நேரான மொழிகள் தமிழிற் கிடைக்கவில்லையோ? அல்லது ஆங்கிலங்கலந்த பேச்சே தமக்கோர் அரும்பெருமையென நினைக்கின்றனரோ? அறிகிலம். அறிஞர்காள்! அடியேன் ஆங்கிலம், ஆரிய முதலிய பாடைகளைக் கற்கவேண்டாமென சொற்றதாயெண்ணற்க.

ஐயகோ! தமிழ்மக்களாகிய நம் நிலைமையை யுன்னவுன்னக் கண்ணீர் பெருகுகிறது. சொல்லுங்கால் நாவும் நடுங்குகிறது. என்னையெனின்? ஓர் தமிழன் தன்மகனுக்குக் கடிதம் எழுதவேண்டுமேல் ஆங்கிலத்திலேயே வரைகிறான். இதுவுமன்றித்தமிழர்கள் நாலியற்றுவதும் ஆங்கிலத்திலோ? அல்லது ஆரிய ஆங்கிலமொழிகள் கலந்த தமிழிலோ! இதற்குக்காரணமென்னை! தாய்மொழியிடம் பற்றின்மையேயன்றே?

1924-ம் ஆண்டு மார்ச்சுமாதத்திய "இலக்ஷ்மி" என்னும் மாசிகையிற்—றிரு—வி, கலியாண சுந்தரமுதலியாரவர்களும், "தமிழரியக்கம்" என்ற கட்டுரையில் "தற்போழ்து தமிழ்தரைமட்டுமுளது! தமிழ் மக்களிருக்கின்றனர். ஆனல், தமிழ்நாடு இல்லை எங்கே? உயிர்போகும் நிலைமையிலிருக்கிறது. காரணம்யாது? தாய் மொழியிடம்

பற்றின்மையே" என்ற [illegible] குறைத்தமைக்குத் தாய்மொழியிடம் பற்றின்மையை ஓர் எதுவாகக்காட்டிப் போந்தனர். ஆகலான், தமிழ் வளங்குறைதல், தமிழின் குற்றமன்று, நங்குற்றமே.

உத்தமர்களே! யான் இதுகாறுங்கூறியவாற்றுல் நந் தெய்வத்திருத்தமிழ். தொன்மையானும், தெய்வத்தன்மை யானும், மொழியின் இனிமையானும் பொருள் சிறக்கும் பெருமையானும், காலத்திரிபின் அழியாமையானும், தந் தேரிலாத்தனிப் பெருஞ்சிறப்பைத் தரித்தது நந்தமிழ் மொழியே. வேற்றுமொழியல்ல வென்பதையறிவீர்.

தண்டமிழ்த்தொண்டர்காள்!

நந்தமிழ்மொழியின், நயமும், வளமும், நலியாதிருக்க வேண்டுமேல், நீவிர்பிறரிடம் வார்த்தையாடும் போதும், நால்களியற்றும் போழ்தும், உற்றூர் உறவினர்க்குக்கடிதம் வரையும்பொழுதும் பிறமொழிக்கலப்பை விடுத்துப்பேச வும், எழுதவும் வேண்டுகிறேன்.

தண்டமிழ் மக்காள்!

தமிழ்த்தாயைப்போற்ற எழுமின்! எழுமின்! தமிழ்த் தாயும் தமிழ்நாடும், பல்லூழி பல்லூழி தன் வளங்குன்றுத் தனிப்பெருந்தகைமையுடன் வாழுமாறு, எல்லாம் வல்ல இறையை யனவரதமும் இறைஞ்சுகிறேன்.

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
வானமளந்த தனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே (பாரதி)

சாந்தி. சாந்தி. சாந்தி.